பெருமையாக இருக்கின்றது. இருந்தாலும்கூட இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தொடங்கப்பட்டு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன், உங்களுக்கு என்ன வேண்டும் என சுருக்கமாகக் கேளுங்கள்; 10–45 மணிக்குள் முடிக்க வேண்டும். (குறுக்கீடு) அதற்காகத்தான் கேட்கிறேன்.

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணன் எடப்பாடியாரால் தொடங்கப்பட்ட, மாணவர்களுக்கான மடிக்கணினிகள் வழங்கும் திட்டம் தற்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. அது எப்போது தொடங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தெரிவித்த நன்றிக்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் மற்ற திட்டங்கள் எல்லாம் எப்போது தொடங்கப்படும் என்று கேள்வியைக் கேட்டிருக்கின்றார். அதற்கு தனியாக ஒரு கேள்வியைக் கேளுங்கள். அதற்கு நான் பதில் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 160, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி, மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

160—

மாணவர் விடுதி

***55854—திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி:**

மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 ஏப்ரல் 13]

(அ) இராயபுரம் தொகுதி, 53-வது வார்டில் உள்ள தொழிற்பயிற்சி நிலையத்திற்கு நவீன வசதிகளுடன்கூடிய மாணவர் விடுதி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் வட சென்னை அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் அமைந்துள்ள இடத்தில், மாணவர்களின் நலன் கருதி புதிய அரசினர் மாணவர் விடுதி கட்ட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இந்த இரண்டு ஆண்டுக்காலத்தில் மட்டும் 13 புதிய அரசினர் மாணவர் விடுதிகளைக் கட்டி, மாணவர்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி அவர்கள்.*

திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராயபுரம் தொகுதி, 53-வது வார்டில் வட சென்னை அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் உள்ளது. 1966-ல் துவங்கப்பட்ட இந்தப் பயிற்சி நிலையம், 2022–2023 ஆம் கல்வியாண்டில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி, வரலாறு வேண்டாம். உங்களுக்கு என்ன வேண்டுமென்று கேளுங்கள். (குறுக்கீடு) மீண்டும் பரிசீலிப்பீர்களா எனக் கேளுங்கள். நான் இன்னும் ஒரு நிமிடத்தில் முடிக்கப் போகிறேன்.*

திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி: *இந்த தொழிற்பயிற்சி நிலையத்தில் 720 மாணவர்கள் படிக்கின்றார்கள். (குறுக்கீடு) 35 அறைகள் உள்ளன. அந்த அறைகள் எல்லாம் 1966 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட நிலையிலேயே இருக்கின்றன. அவற்றையெல்லாம் கட்டித் தர வேண்டும். அதேபோல். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களிடம் கட்டடம் கட்டித் தர வேண்டும் என்று கேளுங்கள். மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர், அதற்கு நீங்கள் பதில் சொல்லுங்கள். இன்னொரு கேள்வி இருக்கிறது.

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற வட சென்னை அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் 1966 ஆம் ஆண்டு கட்டப்பட்ட நிலையம். அந்தப் பயிற்சி நிலையத்திற்கு நானே நேரடியாகச் சென்று, ஆய்வு செய்தேன். சட்டமன்ற உறுப்பினர் அவர்களையும் அழைத்துச்சென்று பார்வையிட்டு, அங்கிருக்கின்ற மாணவர்களின் தேவைகளையெல்லாம் கேட்டறிந்து, அவற்றை உடனடியாக நிறைவேற்றுவதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினரும் சின்ன சின்ன பணிகளை உடனிருந்து கவனித்து, விரைவாக நிறைவேற்றுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர், அவர்கள் 1950, 1960, 1970 ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்ட, இதுபோன்ற பயிற்சி நிலையங்கள், விடுதிகள் எல்லாம் பராமரிக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். இந்த ஆண்டு இதற்கென 18.71 கோடி ரூபாயை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். நிச்சயமாக, விரைவில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, உரிய பணிகள் விரைவாக மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லுங்கள்.

திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் இந்தத் தருணத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பணிமனையில் உள்ள மேற்கூரைகள் ஆங்காங்கே உடைந்திருக்கின்றன. மாணவர்கள் உட்கார்ந்திருக்கின்ற அந்த Fitter, Turner பயிற்சி போன்றவற்றுக்கான Industrial shed எல்லாம் complete ஆக உடைந்திருக்கின்றன. அதுமாத்திரமல்ல; அந்த வகுப்பறைகளில் இருக்கக்கூடிய மேசைகள் எல்லாம் 1966 இல் செய்யப்பட்டவை. எனவே, அந்த மேசைகளையும் மாற்றித் தரவேண்டும்.

2023 ஏப்ரல் 13]

அதேபோன்று கழிப்பறை வசதிகள், அவையும் 1966 இல் கட்டப்பட்ட கட்டடங்கள்தான். எனவே, அவற்றையும் சீரமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சென்னவுடனேயே, உடனடியாக இந்த ஆண்டு அந்த அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு இந்த ஆண்டு சுமார் மூன்று கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. அதுமட்டுமல்லாமல், அந்தத் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு 31 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மாணவர்களுக்குக் கருவிகள், தளவாடங்கள், உபகரணங்கள் போன்ற நவீன தொழில்நுட்பக் கருவிகள் வாங்குவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. அறிவிப்புகள்

(அ) சமத்துவ நாள் உறுதிமொழி நிகழ்ச்சி, சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கும் வகையில் பேரவையை தற்காலிகமாக ஒத்திவைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சமத்துவ நாளை முன்னிட்டு, மாண்புமிகு முதலமைச்சர்*